# சொல் பட்டியல்

**அகாசியா** அல்லது "சித்தீம்" இது யோர்தான் ஆற்றுக்கு கிழக்கே உள்ள ஒரு ஊர்.

**அகோலாள்** கூடாரம், ஜனங்கள் வழிபடும் இடம்.

**அகோலிபாள்** என் கூடாரம் அவளது நாடு.

**அசீரியா** இஸ்ரவேலின் வடகிழக்கு நாடு, பல முள்ளது.

**அசுத்தமான** அல்லது "ஏற்றுக்கொள்ளப் படாதது" சுத்தமல்லாதது அல்லது தேவனுடைய ஆராதனையில் பயன்படுத்த முடியாது. சுத்த முள்ள மற்றும் சுத்தமற்ற காரியங்களுக்கான பழைய ஏற்பாட்டு விதிமுறைகளைத் தெரிந்து கொள்ள லேவி. 11-15 அதிகாரங்களை பார்க்கவும்.

**அசைவாடிக் கொண்டிருந்தார்** எபிரெய மொழியின் அர்த்தம் 'உயரப் பறத்தல்' அல்லது 'வேகமாக கீழே பறந்து வருதல்' ஆகும். ஒரு பறவை தனது கூட்டிலுள்ள தன் குஞ்சுகளை பாதுகாக்க வேகமாக பறப்பதுபோல ஆகும்.

**அசேரா** ஒரு முக்கியமான கானானிய தேவதை. ஜனங்கள் அவளை ஏலின் மனைவி அல்லது பாகாலின் பிரியமானவள் எனவும் எண்ணினர்.

**அடைக்கலக் கூடாரப் பண்டிகை** இந்த பண்டிகை அறுவடைக்கு நன்றி கூறி ஏழாவது மாதத்தில் கொண்டாடப்பட்டது. இது ஏழு நாட்கள் தொடர்ந்தது. பார்க்க யாத். 23:16, லேவி. 23:34-36,43.

**அத்மா** இந்நகரம் தேவனால் அழிக்கப்பட்டது.

**அதிகாரப் பூர்வமான அளவு** எழுத்தின் பிரகாரமாக, "பரிசுத்த சேக்கல்," ஆலயம் அல்லது ஆசரிப்புக் கூடாரத்தில் உபயோகப்படுத்தப்படும் அதிகாரப் பூர்வமான அளவையாகும்.

**அதுல்லாம்** தாவீது ஒளிந்திருந்த குகை.

**அப்தோன்** அல்லது "எபிரோன்."

**அபிஷேக எண்ணெய்** ஒரு பொருளின் மீதோ அல்லது ஜனங்களின் மீதோ ஒலிவ எண்ணெயை ஊற்றி, அவர்கள் விசேஷ வேலைக்காகவோ அல்லது நோக்கத்திற்காகவோ தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் காண்பிப்பது.

**அமலேக்கின் மலைநாடு** எபிராயீம் கோத்திரத்தார் வாழ்ந்த பகுதி. நியா. 12:15.

**அமாவாசை விருந்து** இது யூதர்களின் மாதத்தின் முதல் நாள். இது ஓய்வுக்கும் ஆராதனைக்கும் உரிய சிறப்பான நாள். அன்று ஜனங்கள் ஒன்று கூடி, லேவி. 7:16-21ல் விளக்கியப்படி காணிக்கைகளைப் பகிர்ந்துகொள்வார்கள்.

**மனிதனைச் சுத்தப்படுத்தலாம்** அல்லது "பாவப் பரிகாரம் செய்." எபிரெய மொழியில் "மூடுதல்," "மறைத்தல்," "பாவத்தை நீக்குதல்" எனப் பொருளாகும்.

**அம்னோன்** அம்னோன், அப்சலாம் மற்றும் தாமாரின் அரை சகோதரன். அவரனைவருக்கும் தாவீது தந்தை. ஆனால் அம்னாவின் அம்மா வேறு. பார்க்க 2 சாமு. 3:2,3.

**அம்மோன்** இஸ்ரவேலின் கிழக்குப் பகுதி நாடு.

**அம்பறாத்தூணி** அம்புகள் வைக்கப்படும் பை.

**அமாசா யோவாபின் பதவியை வகித்தான்** யோவாப் இன்னும் தாவீதிற்கு உதவினான் தாவீது அப்சலோமிடமிருந்து ஓடிவந்தபொழுது யோவாப் தாவீதின் படையின் மூன்று தளபதிகளில் ஒருவனாக இருந்தான். பார்க்க 2 சாமு. 18:2.

**அரமாய்க்** பாபிலோன் அரசில் இது அரசாங்க மொழியாகும்.

**அராமிக் மொழி** பாபிலோன் நாட்டின் ஆட்சிமொழி. பல நாட்டு ஜனங்களும் அதிகாரப் பூர்வமான கடிதங்களை இம்மொழியிலேயே எழுதுவர். இந்தத் தானியேலின் பிரதி இது முதல் 7:28வரை இம்மொழியில் உள்ளது.

**அருமா நகரம்** அல்லது "இரகசியமாக" அல்லது "தோர்மாவில்" அபிமெலேக் அரசனாக வாழ்ந்த

நகரம். இது ஒருவேளை சீகேமிலிருந்து தெற்கே 8 மைல் தொலைவில் இருக்கலாம்.

**அல்லோன்பாகூத்** “துக்கத்தின் கர்வாலி மரம்” எனப் பொருள்படும்.

**அவரது நட்சத்திரங்கள்** “அவரது சேனைகள்.” தேவனுடைய விண்ணின் படைகளை இது குறிக்கும். எல்லாத் தூதர்களையும் அல்லது வானின் எல்லா விண்மீன்களையும் இது குறிப்பிடலாம்.

**அறுப்பின் பண்டிகை** ‘‘அறுவடை விழா அல்லது சக்கோத்” என்றுகூட அழைக்கப்படும்.

**அஸ்தரோத்** இந்தப் பொய் பெண்தெய்வம் மக்களுக்குப் பிள்ளைப்பேறு அளிக்கும் என்று கானானியர்கள் நினைத்தனர். அவள் அவர்களின் அன்பிற்கும் போருக்குமான பெண்தெய்வம்.

**அஸ்தோத்** பெலிஸ்தியர்களின் இன்னொரு முக்கிய நகரம்.

**அஸ்கோலோன்** பெலிஸ்தியர்களின் இன்னொரு முக்கிய நகரம்.

**அஷெரா கம்பம்** அஷெரா தேவதையை கனப்படுத்த நாட்டிய ஆலய கம்பம் ஆகும். நிறைய பிள்ளைக் கனியைக் கொடுக்கும் தேவதை என்று அஷெரா பூஜிக்கப்பட்டது.

**அஷேரா** கானானியரின் பொய்த் தேவதை. பாகாலின் மனைவியாக ஜனங்கள் கருதினார்கள்.

**அன்பே** எழுத்தின் பிரகாரமாக, “சகோதரி” எனப் பொருள்படும்.

**ஆகாய விரிவு** எபிரெய மொழியின் அர்த்தம் “வட்ட வடிவமான தட்டைப் போல” அல்லது “கட்டிடத்தின் உச்சியைப்போல.”

**ஆகாஸ்** யூதாவின் அரசன் கி.மு. 735-727ல் ஆண்டான்.

**ஆகோர்** இந்த பெயரின் அர்த்தம் “தொல்லை” ஆகும்.

**ஆசகேல்** சிரியாவின் அரசன்.

**ஆசரிப்புக் கூடாரம்** இஸ்ரவேல் ஜனங்கள் தேவனை சந்திப்பதற்காக சென்ற பரிசுத்தக் கூடாரம்.

**ஆசைப்பெண்கள்** ஒருவனுக்கு மனைவிகளைப் போலுள்ள பெண்கள்.

**ஆசேர்** “மகிழ்ச்சி” அல்லது “ஆசீர்வதிக்கப்பட்ட” எனப் பொருள்படும்.

**ஆட்சியின் மூன்றாம் ஆண்டு** கி.மு. 605.

**ஆண் விபசாரிகள்** பெரும்பாலும் பிற ஆண்களோடு கொண்ட உடலுறவு பாவத்தில் தங்கள் உடலை விற்ற ஆண்கள் பொய் தெய்வங்களை வழிபடும் கானானிய வழிபாட்டின் ஒரு பகுதி இது.

**ஆபிரகாம்** இப்பெயரின் அர்த்தம் “சிறந்த தகப்பன்” அல்லது “நிறைய ஜனங்களின் தகப்பன்” எனப்படும்.

**ஆபீப்** அல்லது ‘‘வசந்தகாலம்” யூத வருடத்தின் முதல் மாதமாகிய நிசான் மாதமாகும்.

**ஆபேல் மிஸ்ராயீம்** “எகிப்தியர்களின் துக்கமான நேரம்” எனப் பொருள்படும்.

**ஆமாத், அர்பாத் செப்பர்வாயீம்** சிரியாவிலுள்ள நகரங்கள்.

**ஆமென்** “உண்மையாகவே” “நிச்சயமாகவே” எனப் பொருள்படும் எபிரெயச் சொல். கூறப்பட்டவற்றை ஒருவன் ஏற்றுக்கொள்கிறான் என்பதை இது காட்டுகிறது.

**ஆமோனா** இந்த எபிரெய வார்த்தையின் அர்த்தம் “கூட்டம்” என்பதாகும்.

**ஆயீ** இந்த பெயரின் அர்த்தம் “அழிவு” ஆகும்.

**ஆலயம்** எருசலேமில் உள்ள யூதர்களின் வழிபாட்டுக்குரிய சிறப்பான கட்டிடம். அல்லது “வாசஸ்தலம்.”

**ஆலெப்** எபிரெய அரிச்சுவடியின் முதலெழுத்து, எபிரெய மொழியில் இப்பாடலின் ஒவ்வொரு பகுதியும் அடுத்தடுத்த எழுத்துக்களில் ஆரம்பிக் கும்.

**ஆராமியர்** சிரியா தேசத்தவர் ஆகும்.

**ஆழ்ந்த உணர்ச்சிகள்** எபிரெய மொழியில் இது அன்பு, பகை, கோபம், எழுச்சி, பொறாமை போன்றவற்றைக் குறிக்கும்.

**ஆளுகை** அல்லது “தீர்ப்புசெய்ய.”

**ஆனதோத்திலுள்ள மனிதர்கள்** எரேமியாவின் பிறந்த ஊர். அவனது சொந்தக்காரார்கள்.

***ஆனாத்*** *கானானிய யுத்த தேவதை. இங்கு இந்த பராகரமம் சம்காரின் தந்தை அல்லது தாய் அல்லது "இது பெரிய யுத்தவீரனாகிய சம்கார்" அல்லது "ஏனாத் என்ற ஊரிலிருந்து வரும் சம்கார்" எனப் பொருள்படும்.*

***இசக்கார்*** *"பரிசு" அல்லது "சம்பளம்" எனப் பொருள்படும்.*

***இது … இல்லை*** *நகல்படி 'அங்கு சமாதானம் இல்லாதிருக்கையில், சமாதானம் என்று வாக்குறுதி அளிப்பார்' என்பதாகும்.*

***இந்திர நீலக்கற்கள்*** *மிக அபூர்வமான, விலையுயர்ந்த கல்.*

***இம்மானுவேல்*** *தேவன் நம்மோடு இருக்கிறார் என்று பொருள்.*

***இரதத்துக்குரிய நகரம்*** *குதிரைகளைம் இரதங்களைம் வைப்பதற்கேற்ற சிறந்த இடங்களைக் கொண்ட நகரங்கள்.*

***இராட்சதர்*** *உயரத்திலும் பராக்கிரமத்திலும் பெயர் பெற்ற ஏனாக் குடும்பத்தைச் சேர்ந்த ஏனாக்கியர்கள், போரில் வல்லவர்கள். எண்.* 13:33.

***இரத்தின கம்பளம்*** *விலை உயர்ந்த கெட்டியான சிவப்பான ஆடை.*

***இரண்டாவது மாதத்தின் பதினைந்தாம் நாள்*** *அதாவது இளவேனிற் கோடைகாலம் என்ற மாதத்தின்* 15*வது நாள். இஸ்ரவேல் ஜனங்கள் ஒரு மாத காலமாக பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள்.*

***இருபத்து நான்கு கிண்ணங்கள்*** *எழுத்தின் பிரகாரமாக ஒரு எப்பா அளவில் பத்தில் மூன்று பங்காகும்.*

***இஸ்ரவேல் கன்னி***: *சமாரியா நகரம்.*

***இஸ்ரவேல்*** *"தேவனுக்காகப் போராடுகிறான்," "தேவனுடன் போராடுகிறான்" அல்லது "தேவனுடைய போராட்டம்" எனப்படும்.*

***ஈசாக்கு*** *இப்பெயரின் பொருள் "அவன் சிரிக்கிறான்" அல்லது "அவன் மகிழ்ச்சியாயிருக்கிறான்."*

***ஈசோப் தழை*** 3 *அடி நீளமுடைய தண்டினை உடைய செடி. அதன் இலைகளும், கிளைகளும், தலை முடியைப் போன்றிப்பதால் அவற்றைத் தூரிகை போன்று உபயோகப் படுத்தலாம்.*

***உங்கள் கண்களுக்கு … காணப்படும்*** *எழுத்தின் பிராகாரமாக 'உன் கைகளின் மேலுள்ள ஒரு அடையாளம் மற்றும் உன் நெற்றியின் மேலுள்ள நினைவுக் குறி" ஒரு யூத மனிதன் தேவனுடைய கட்டளைகளை நினைவுகூருவதற்காக தன் கரத்திலும், நெற்றியிலும் விசேஷமான ஒன்றைக் கட்டுகிறதை இது குறிக்கலாம்.*

***உசியா*** *யூதாவின் அரசன் கி.மு.* 767-740*ல் ஆண்டான்.*

***உடன்படிக்கை "****ஆதாரம்" என்பதாகும். பத்து கட்டளைகள் செதுக்கப்பட்ட இரு கற்பாளங்கள். கர்த்தருக்கும் இஸ்ரவேலருக்கும் உள்ள உடன்படிக்கையின் ஆதாரமாக இருந்தன.*

***உடன்படிக்கைப் பெட்டி*** *சீனாய் பாலைவனத்தில் இஸ்ரவேல் ஜனங்களோடு தேவன் இருந்தார் என்பதை நிரூபிக்கும் வகையில், பத்துக் கட்டளைகள் எழுதப்பட்ட இரண்டு கற்பலகைகளும் அந்த உடன்படிக்கைப் பெட்டியில் இருந்தது.*

***உடன்படிக்கையின் வாக்குறுதி*** *இதன் உண்மையான அர்த்தம் மோசேயின் சட்டமாகும், அதாவது இஸ்ரவேல் ஜனங்களோடு தேவன் செய்து கொண்ட உடன்படிக்கையாகும்.*

***உபவாசம்*** *விசேஷ விண்ணப்பத்திற்கும் வழிபாட்டிற்கும் உணவின்றி இருத்தல்.*

***உயர்ந்த மலை*** *எழுத்தின் பிரகாரமாக, "எல்ஸ் மலை" இது சிரியாவில் உள்ள விசேஷ மலையாக இருக்கலாம். அல்லது "தேவனுடைய மலை." இந்த இடத்தில்தான் தேவன் தன் தூதர்களை சந்திக்கிறார்.*

***உயர்ந்த பீடங்கள்*** *தேவனையோ அல்லது பொய்த் தெய்வத்தையோ வழிபடும் இடங்கள். அந்த இடங்கள் பெரிதும் மலைகளிலோ, குன்றுகளிலோ இருந்தன.*

***உயிர்*** *எழுத்தின் பிரகாரமாக, "ஆவி" எனப் பொருள்படும்.*

***உன் சகோதரன்*** *அல்லது "உனது சொந்த நாட்டிலுள்ள மனிதன்."*

***ஊரீம்*** *இது ஆசாரியர்கள் தேவனிடமிருந்து பதில் பெறுவதற்காக பயன்படுத்திய கற்கள். எண்.* 27:20-22.

***ஊரீம் தும்மீம்*** *தேவனுடைய சந்நிதியில் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும்படி ஆசாரியர்களால் பயன்படுத்தப்பட்டது. ஒருவேளை இவை சீட்டுப் போடுவதற்காக பயன்படுத்தப்பட்ட கற்க*

ளாகவும், குச்சிகளாகவும், எலும்புத் துண்டு களாகவும் இருந்திருக்கலாம்.

**எக்ரோன்** பெலிஸ்தியர்களின் இன்னொரு முக்கிய நகரம்.

**எகோனியா** யோயாக்கீமின் இன்னொரு பெயர்.

**எசேக்கியா** யூதாவின் அரசன் கி.மு. 727-687ல் ஆண்டான்.

**எடுசுவர் (கொத்தளம்)** பகைவர்கள் கோட்டை மதிலுக்குள் செல்வதற்காக முற்றிகையிடுவோரால் எழுப்பப்படும் கட்டுமானம். இங்கு 'எடுசுவர்' என்று குறிக்கப்படுகிறது. என்னும் தொடரின் சொல்லாக்கம்.

**எந்நக்கோரி** இதன் பொருள் "அழைக்கிற ஒருவரின் நீரூற்று" என்பதாகும்.

**எத்தியோப்பியா** ஆப்பிரிக்கா கண்டத்தில் சிவந்த சமுத்திரத்தின் அருகே இருக்கக்கூடிய ஒரு நாடாகும்.

**எத்திரோ** அவன் ரெகுவேல் என்றும் அழைக்கப்பட்டான்.

**எப்பிராயீம்** எபிரெய மொழியில் "இரட்டிப்பான கனிவுள்ள" எனப் பொருள்படும். இது நாட்டின் மத்திய பகுதி. இஸ்ரவேலின் வட இராஜ்யமாக இருந்தது.

**எப்பிராயீம்** யோசேப்பின் இளைய மகன். அவன் பெயரில் இஸ்ரவேலின் வடபகுதியில் உள்ள இராஜ்யம் அழைக்கப்படுகிறது.

**எப்பிராத்தா** பெத்லெகேம் தாவீது பிறந்த ஊர்.

**எபிரெயர்** அல்லது ''இஸ்ரவேல்" எனப் பொருள்படும்.

**எலியேசர்** இந்தப் பெயர் ''என் தேவன் உதவுகிறார்" எனப் பொருள்படும்.

**எலூல்** ஆகஸ்ட் - செப்டம்பர். கி.மு. 443.

**எஸ்கோல்** எபிரெய வார்த்தையின் அர்த்தத்தைப் போன்று இந்த பெயர் "திராட்சைக் கொத்து" எனப் பொருள்படும்.

**ஏசா** இப்பெயர் "ரோமங்களுள்ளவன்" எனப் பொருள்படும்.

**ஏசாவின் மலை** சேயீர் மலை.

**ஏதோம்** இந்த இடமானது இஸ்ரவேலுக்கு தெற்கு மற்றும் கிழக்கு பகுதியாகும்.

**ஏதோம்** "சிவப்பு நிறம்" எனப் பொருள்படும்.

**ஏமோரின் ஜனங்கள்** சீகேம் நாட்டில் பிறந்த குடி மகன்களைக் குறிக்கும். ஆதி. 34ம் ஆதிகாரத்திலுள்ள ஒரு கதையில் ஏமோர் சீகேமின் தந்தையானவன். சீகேம் பட்டணத்திற்கும் ஏமோரின் மகனுடைய பெயரிட்டான்.

**ஏபோத்** இது நமக்கு எதுவென்று சரியாகத் தெரியாது. ஒருவேளை இது இஸ்ரவேலின் தலைமை ஆசாரியன் அணிந்திருந்த அங்கியை போன்ற ஒரு விசேஷித்த அங்கியாக இருக்கலாம். (யாத். 28) அல்லது இது ஒருவேளை ஒரு விக்கிரமாக இருக்கலாம்.

**ஏல்பேரீத்** இந்த தெய்வத்தின் பெயரின் அர்த்தம் "உடன் படிக்கையின் தெய்வம்" ஆகும்.

**ஏவாள்** எபிரெய மொழியில் இந்த பெயரின் அர்த்தம் "வாழ்க்கை" என்பதாகும்.

**ஏனாக்கியர்** ஏனாக்கின் சந்ததி. அவர்கள் வளர்த்தியானவர்கள் மற்றும், பலத்தோடு சண்டையிடும் மனிதர்கள் எனவும் புகழ்பெற்ற ஒரு குடும்பமாகும். எண். 13:33.

**ஓம்ரி** இஸ்ரவேலின் அரசன் பொய்த் தெய்வங்களை தன் நாட்டில் வழிபடச் செய்தவன்.

**ஓய்வு நாள்** சனிக்கிழமை யூதருக்கு ஓய்வு எடுக்கவும் கர்த்தரைத் தொழுதுகொள்ளவும் இந்த நாள் ஒதுக்கப்பட்டது.

**ஓர்மா** இந்த பெயருக்கு "முழுமையாக அழிக்கப்பட்டது" அல்லது "ஒரு அன்பளிப்பை தேவனுக்கென்று முழுமையாக கொடுக்கப் பட்டது" எனப் பொருள்படும். லேவி 27:28-29.

**கடற்கோட்டை** தீரு நகரின் இன்னொரு பெயர்.

**கர்த்தர் எனது கொடி** அல்லது "யேகோவா நிசி."

**கர்த்தருடைய மந்தை** யூதா ஜனங்கள்.

**கர்வாலி மரம்** இம்மரங்கள் ஜனங்களால் வணங்கப்படுகிற உருவங்களைப் போன்று விளங்கும்.

**கப்தோர்** சைபிரஸ்.

**கல்தேயர்கள்** பாபிலோனில் உள்ள முக்கியமான வம்சத்தினர். பாபிலோனின் அரசனும் இவர்க

ளின் வழி வந்தவன். இவர்கள் கற்ற ஜனங்கள். இவர்கள் விஞ்ஞானம், வரலாறு, மொழிகள், வானவியல் போன்றவற்றில் அறிவுள்ளவர்கள். ஆனால் மந்திரங்களிலும் நட்சத்திரங்களிலும் நம்பிக்கை உடையவர்கள்.

***காயீன்*** எபிரெய மொழியில் "உருவாக்கு" அல்லது "வாங்கு" என்று பொருள்படும்.

***கலயெத்*** "கிலெயாத்" என்பதின் மற்றொரு பெயர். எபிரெய மொழியில் "ஒப்பந்தத்தின் பாறைக் குவியல்" எனப்படும்.

***களஞ்சியம்*** தானியத்தை அடித்து அல்லது மிதித்து உமியைப் போக்கிச் சேர்க்கும் இடம்.

***கன்மலை*** இது தேவனுக்கான நாமம். அவர் கோட்டை அல்லது பலமிக்க பாதுகாப்பான இடம் போன்றவர் என்பதை இது காட்டும்.

***காகத்தின் பாறை*** பார்க்க: எண்ணாகமம் 22:1.

***காட்சிகள்*** தேவன் மனிதனோடு பேசுவதற்குப் பயன்படுத்தும் கனவைப்போன்ற கருவி.

***காடை*** ஒருவகை பறவை.

***காத்*** "அதிர்ஷ்டம்" அல்லது "பாக்கியம்" எனப் பொருள்படும்.

***காத் ஊரானாகிய ஒபேத்ஏதோம்*** லேவி கோத்திரத்திலுள்ள ஒருவன் எருசலேம் அருகில் வாழ்பவன்.

***காத்சா*** பெலிஸ்தியர்களின் முக்கிய நகரம்.

***காதேஸ் பாலைவனம்*** இது சிரியாவில் உள்ள பாலைவனம். இதற்கு "பரிசுத்த பாலைவனம்" எனப் பொருள்படும்.

***காபூல்*** இந்த பெயர் எபிரெய மொழியில் "பயனற்றது" என்ற பொருள் உள்ள வார்த்தையை போலுள்ளது.

***காம்*** எகிப்தியர்கள் காமின் சந்ததியினர். பார்க்க. ஆதி. 10:6-10.

***காமோஸ்*** மில்காம் அம்மோனிய மக்களின் தெய்வமாக இருந்தபோதிலும் காமோஸ் மோவாபியரின் நாட்டு தெய்வம் ஆகும்.

***கானான்*** கானானியர்கள் வாழும் இடம். இது, இஸ்ரவேலின் ஒரு பகுதியும், லீபனோன், சிரியா ஆகியவற்றைக் கொண்டது.

***கித்தீம்*** சைப்ரஸ் தீவு அல்லது கிரீட் தீவைக் குறிக்கும்.

***கித்தீம் தீவுகள்*** சைபரஸ்தீவு மத்தியதரைக் கடல் பகுதிகளிலுள்ள தீவுகளையும் குறிக்கும்.

***கிபியா*** இந்த இடத்தில் பென்யமீன் குடும்பத்தினர் பெரிய பாவம் செய்தனர்.

***கிபியோத் ஆர்லோத்*** இந்த பெயரின் பொருள் "விருத்த-சேதன மலை" ஆகும்.

***கில்கால்*** இந்த பெயர் "உருண்டுபோக" என்ற பொருளடங்கிய எபிரெய வார்த்தையைப் போன்றது.

***கீசோன் நதி*** தாபோர் மலையிலிருந்து 10 மைல் தொலைவில்லுள்ள ஒரு நதி.

***கீரியோத்*** மோவாப்பின் நகரம்.

***கீரியாத் யாரீம்*** எழுத்தின் பிரகாரமாக, "காட்டின் வயல்கள்" காடு என்பதைக் குறிக்கும் எபிரெயச் சொல் இந்நகரின் பெயராயிற்று.

***கிரேத்தியர்கள்*** அல்லது "கிரேத்திலுள்ள ஜனங்கள்." இவர்கள் சொல்லப்போனால் பெலிஸ்தியர்களே, ஆனால் தாவீதின் சில சிறந்த வீரர்கள் கிரேத்தியர்களே.

***கிஸ்லேயு ... இருபதாவது ஆண்டு*** இது கி.மு 444 டிசம்பரைக் குறிக்கும்.

***குழுக்களாக*** அல்லது ''பிரிவுகள்" ஜனங்கள் ''கர்த்தரின் சேனைகளாக" ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தார்கள் என்பதைக் குறிக்கும் இராணுவ வார்த்தையாகும்.

***குளவிகள்*** கடந்தை என்று கூறப்படும் மலைக் குளவிகள் கொட்டினால் மரண சிட்சை கிடைக்கும். இங்கு தேவனுடைய தூதர்களையும், அவரது பேராற்றலையும் அது குறிக்கலாம்.

***குறி சொல்கின்ற ஒரு பெண்*** மரித்துப்போன உயிர்களுடன் பேசுகிறவள்.

***கூரை*** இஸ்ரவேல் நாட்டில், வீட்டின் மேல் கூரை தட்டையாக இருக்கும். ஜனங்கள் இதை பொருட்களைப் சேர்த்துவைக்க பயன்படுத்தினர்.

***கூஷ்*** "எத்தியோப்பியா"வின் மற்றொரு பெயர்.

***கெர்சோம்*** எபிரெய வார்த்தைகளைப் போன்று இது ''அங்கே ஒரு அந்நியன்" எனப் பொருள் படும்.

**கெரிசீம் மலை** இந்த மலையானது சீகேம் பட்டணத்தின் அருகிலுள்ளது.

**கேதார்** இஸ்ரவேலின் கிழக்கேயுள்ள நாடு.

**கேபா, ராமா, கிபியா** எருசலேமின் வடபகுதி பட்டணங்கள்.

**கேருபீன்கள்** தேவனுடைய தனிப்பட்ட தூதர்கள். உடன்படிக்கை பெட்டியின் மேலாக சிலைகளாக வடிவமைக்கப்பட்ட தேவதூதர்கள்.

**கோமேதகக்கல் நீலம்** அல்லது பழுப்பு நிறத்திலுள்ள, விலை மதிப்பான ஒரு கல்.

**கோரேஷ் முதலாம் ஆட்சி ஆண்டு** கி.மு. 539-538

**சங்கீதம் 34** எபிரெய மொழியில் இந்த சங்கீதத்தில் ஒவ்வொரு வாக்கியமும் ஆரம்ப வரிசையில் அடுத்த எழுத்திலிருந்து ஆரம்பிக்கின்றன.

**சங்கீதம் 111** இச்சங்கீதத்தின் ஒவ்வொரு வசனத்தின் ஒவ்வொரு பகுதியும் எபிரெய மொழியிலுள்ள அடுத்த எழுத்தைக்கொண்டு ஆரம்பிக்கிறது.

**சங்கீதம் 112** எபிரெய மொழியில் இச்சங்கீதத்தின் ஒவ்வொரு வசனத்தின் ஒவ்வொரு பகுதியும் எபிரெய மொழியிலுள்ள அடுத்தடுத்த எழுத்துக்களைக் கொண்டு ஆரம்பிக்கும்.

**சபேயர்** பாலைவனப்பகுதியைச் சார்ந்த ஜனங்கள். அவர்கள் ஜனங்களைத் தாக்கி, அவர்களின் பொருள்களைக் கவர்ந்து செல்வார்கள்.

**சமாரியா** இஸ்ரவேலின் வட இராஜ்ய தலைநகரம்.

**சர்கோன்** அசீரியாவின் அரசன். கி.மு. 721-705ல் ஆண்டான்.

**சல்மோன் மலை** இது ஒருவேளை சீகேமுக்கு அருகிலுள்ள ஏபேல் மலையின் மற்றொரு பெயராக இருக்கலாம்.

**சாப்னாத்பன்னேயா** இது ஒரு எகிப்திய பெயர் “வாழ் வோடு இணைந்து இருக்கிறவர்” எனப் பொருள்படும். ஆனால் எபிரெய மொழியில் “மறைவான காரியங்களை வெளிப்படுத்துகிற மனிதன்” எனப் பொருள்படும்.

**சாராள்** இந்த எபிரெய பெயரின் பொருள் “இளவரசி” எனப்படும்.

**சிநெயார்** பாபேல் கோபுரம் உள்ள சமவெளி. (ஆதி. 11:2) பாபிலோன் நகரம் இதில் கட்டப்பட்டது.

**சிம்ரி** சிம்ரி என்பவன் பல ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரவேலில் ஏலா மற்றும் பாஷாவின் குடும்பத்தினரை கொன்றவன். பார்க்க 1இராஜா. 16:8-12.

**சிமியோன்** “அவர் கேட்கிறார்” எனப் பொருள்படும்.

**சிரியோன்** அல்லது சியோன்.

**சீகேம் நகரத்துக் கோபுரம்** இது ஒருவேளை சீகேமுக்கு அருகிலுள்ள ஒரு இடமாகும். அது பட்டணத்தின் ஒரு பகுதி அல்ல.

**சீகோர் நதி** ஒருவேளை இது நைல் நதியிலிருந்து கிழக்காகச் செல்லும் நதிகளில் ஒரு கிளை நதியாக இருக்கும்.

**சீட்டு** மரக்கட்டைகள், கற்கள் அல்லது எலும்புத் துண்டுகள் ஆகியவை முடிவெடுக்கும் தாயக் கட்டைகளாகப் பயன்படுத்தப்பட்டன. நீதி. 16:33.

**சீப்பு** கிரேக்க தீவுகள்.

**சீயர்** தீர்க்கதரிசி.

**சீயோன் மகள்** எருசலேமின் இன்னொரு பெயர்.

**சீயோன்** இது தென்கிழக்கிலுள்ள எருசலேம் கட்டப்பட்டிருக்கிற மலைப்பகுதியாகும். சில வேளைகளில் இதற்கு எருசலேமில் வாழுகிற தேவனுடைய ஜனங்கள் எனப் பொருள்படும்.

**சீலோவா** எருசலேமிலுள்ள குளம். புதிய ஏற்பாட்டில் இது ‘சீலோவாம்’ என்று அழைக்கப்படுகிறது.

**சுக்கோத்** யோர்தான் ஆற்றிற்கு கிழக்கு பக்கமாக உள்ள நகரம் “தற்காலிகமாக தங்குமிடம்” எனப் பொருள்படும்.

**சூசான்** பெர்சியாவின் தலைநகரம்.

**செங்கடல்** அல்லது ‘நாணல் கடல், 1 இரா. 9:26.

**செங்கோல்** ஒரு அரசன் தனது கையில் வைத்திருக்கிற சிறப்பான கோல்.

**செம்பாயீம்** இந்நகரம் தேவனால் அழிக்கப்பட்டது.

**செபுலோன்** "துதி" அல்லது "மரியாதை" எனப் பொருள்படும்.

**செருபாபேல்** அவன் சேஸ்பாத்சார் என்றும் அழைக்கப்படுகிறான்.

**சேசாய், அகிமான், தல்மாய்** ஏனாக் என்ற பெயருடைய மனிதனின் மூன்று மகன்கள். அவர்கள் அரக்கர்கள். எண். 13:22.

**சேத்** எபிரெய மொழி அர்த்தம் "கொடு" என்பதாகும்.

**சேபா** "ஏழு" அல்லது "உறுதி மொழி."

**சேபா** தென் இஸ்ரவேலில் உள்ளது. இன்றைக்குள்ள சவுதி அரேபியாவிற்கு அருகில் உள்ளது. இது வாசனைப்பொருள் வியாபாரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது.

**சேயீர்** ஏதோமிலுள்ள மலைப் பகுதியான இடம்.

**சேரா** "பிரகாசம்" எனப் பொருள்படும்.

**சேஸ்பாத்சார்** இது உண்மையில் செருபாபேலின் பெயராகும். இதன் அர்த்தம், "பாபிலோனுக்கு அந்நியமானவன்." அல்லது "அவன் பாபிலோனை விட்டு விலகினான். "சேஸ்பாத்சார் என்பது உண்மையின் அவனது ஆராமியப் பெயராகும்."

**சேற்றுக்குழி** பிணங்கள் அழுகும் கல்லறை.

**சேற்று** பழங்காலத்து கதைகளில் சீயோன் மரண இடமாக கூறப்படுகின்றது. இதுஇருண்ட சுற்றிலும் சேறு நிறைந்த கல்லறை போன்ற இடமாகும்.

**சேனைகள்** "சேனைகள்" "தேவதூதர்கள்" அல்லது "நட்சத்திரங்களும் கிரகங்களும்" எனப் பொருள்படலாம். "சர்வ வல்லமையுள்ள கர்த்தர்" என்கிறப் பெயரின் ஒரு பகுதி மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. எல்லா உலகங்களின் ஆற்றல்களையும் தேவன் அடக்கி ஆள்கிறார் என்பதை இது காட்டும்.

**சொந்த சொத்து** இஸ்ரவேலில், நிலமானது ஒரு குடும்பத்திற்கோ, அல்லது கோத்திரங்களுக்கோ சொந்தமாக இருக்கும். ஒரு மனிதன் தன் நிலத்தை விற்கலாம். ஆனால் யூபிலி ஆண்டின் போது அந்த நிலம் பூர்வீகமாக எந்தக் குடும்பத்திற்கும், கோத்திரத்துக்கும் கொடுக்கப்பட்டதோ அவர்களுக்கே சொந்தமாகும்.

**சோதோம், கொமோரா** தேவனால் அழிக்கப்பட்ட இரண்டு நகரங்கள்.

**ஜனங்கள் ... மாட்டான்** எழுத்தின் பிரகாரமாக, "அவன் தனது நண்பர்களுக்கு ஒரு பங்கைத் தர வாக்குறுதியளிக்கிறான். அவனது பிள்ளைகளின் கண்கள் குருடாகும்" எனப் பொருள்படும்.

**ஜெகர்சகதூதா** அரமேய மொழியில் "ஒப்பந்தத்தின் பாறைக் குவியல்" எனப் பொருள்படும்.

**ஞாபகக் கற்கள்** இந்தக் கற்கள் ஜனங்களுக்குச் சிறப்புக்குரிய சிலவற்றை நினைவூட்டுவதற்கு உதவும்படி அமைக்கப்பட்டுள்ளன. இஸ்ரவேலின் பழங்காலத்தில் ஜனங்கள் சிறப்புக்குரிய இடங்களில் இத்தகைய கற்களைப் பொய்த் தெய்வங்களை தொழுதுகொள்வதற்காக அமைத்தனர்.

**தகுதியற்றவன்** முக்கியமற்றவன்.

**தபேரா** இந்த பெயருக்கு "எரிகின்றது" என்று அர்த்தம்.

**தமஸ்கு** சீரியா நாட்டு நகரம்.

**தம்மூஸூ** பொய்த் தெய்வம். மரித்துப்போன இது அழுதால் திரும்ப உயிர் பெறும் என்பது நம்பிக்கை.

**தர்தான்** அசீரியா படைத் தளபதி.

**தர்ஷீஸ்** இஸ்ரவேலுக்கு வெகு தூரத்தில், ஸ்பெயினில் உள்ள நகரம். பெரிய கப்பல்களுக்குப் புகழ் பெற்ற நகரம்.

**தரியு அரசாண்ட இரண்டாம் ஆண்டு** ஏறக் குறைய கி.மு. 520.

**தரிசன பள்ளத்தாக்கு** எருசலேம் அருகிலுள்ள பள்ளதாக்கு.

**தரிசனம்** கனவு போன்றது. தேவன் அவரது சிறப்பான ஜனங்களுக்கு அவர்கள் பார்க்கவும் கேட்கவும் காட்சி தந்து செய்தியைத் தருவார்.

**தாகோன்** கானானிய ஜனங்கள் இந்த பொய்த் தெய்வம் நல்ல தானிய விலைச்சலை அவர்களுக்கு கொடுப்பார் என நம்பி ஆராதித்தனர். இது ஒருவேளை பெலிஸ்திய ஜனங்களின் மிக முக்கியமான தெய்வமாக இருக்கலாம்.

**தாண்** தாண் வம்சத்தார் வாழும் இடம். வட இஸ்ரவேலின் எல்லையில் உள்ளது. அவர்களே வடக்கிருந்து வருவோரால் முதலில் தாக்கபடுவார்கள்.

**தாண்** "யோசிக்க" அல்லது "நியாயந்தீர்க்க" எனப் பொருள்படும்.

***தாபோர்*** *இஸ்ரவேலிலுள்ள ஒரு மலை.*

***தாமரைக் கொடி*** *ஒருவகை மரம். அதன் இலைகள் மிகுதியான நிழலைக் கொடுக்கின்றன.*

***தாவீதின் நகரம்*** *எருசலேம் நகரத்தின் தென் கிழக்கு திசையிலுள்ள பழமையான நகரப்பகுதி.*

***தானியேல்*** *ஞானி.*

***திராட்சை பிழியும் இடம்*** *திராட்சைப் பழங்களிலிருந்து சாறு எடுக்கும் இடம். சில வேளைகளில் பூமியிலுள்ள பாறையில் காணப்படும் ஓர் ஆழமற்ற துவாரமாகவே அந்த இடம் இருக்கும்.*

***தீப்ஸும்*** *எகிப்தில் உள்ள ஒரு நகரம். இது அசீரிய படையால் கி.மு. 666ல் அழிக்கப்பட்டது.*

***தீபோன்*** *மோவாப் நாட்டிலுள்ள நகரம். 'துக்கமானது' என்று பொருள்.*

***தீரு*** *பொனிசியாவின் தலைநகரம்.*

***தேமான்*** *ஏதோமின் முக்கிய நகரங்களுள் ஒன்று.*

***தூமா*** *ஏதோம். 'அமைதி' அல்லது 'அழிவு' எனும் பொருள்.*

***நறுமணப்புகை*** *கந்தவர்க்க மரத்தின் உலர்ந்த பிசின் கர்த்தருக்கு சுகந்த வாசனையாக பரிமளிக்கும்.*

***நறுமணப் பொருட்கள்*** *சிறப்புக்குரிய காயவைக்கப்பட்ட மரத்துண்டுகள். இதனை எரித்து இனிய மணமிகுந்த புகையை எழுப்புவார்கள். இதனை தேவனுக்கு அன்பளிப்பாக செலுத்தினார்கள்.*

***நகோமி*** *இந்த பெயரின் அர்த்தம் "மகிழ்ச்சி" அல்லது "இன்பம்" ஆகும்.*

***நசரேயன்*** *தேவனுக்கு ஒரு விசேஷ வாக்குதத்தம் செய்த ஒரு மனிதன். எபிரெய மொழியில் "பிரிக்கப்பட்டவன்" எனப் பொருள்படும். எண். 6:1-21 பார்க்கவும்.*

***நப்தலி*** *"எனது போராட்டம்" எனப் பொருள்படும்.*

***நாபால்*** *இந்த பெயருக்கு "முட்டாள்தனம்" என்று பொருள்.*

***நியாயத்தீர்ப்பின் பள்ளத்தாக்கு*** *இது யோசபாத் பள்ளத்தாக்கைப் போன்றதொரு பெயராகும்.*

***நியாயத்தீர்ப்பு மார்ப்பதக்கம்*** *ஆசாரியர்களின் மார்பை மறைக்கின்ற ஒரு சிறப்பு மேலாடை.*

***நிம்ரோத்*** *அசிரியாவின் இன்னொரு பெயர்.*

***நினிவே*** *அசீரியா நாட்டின் தலைநகரம். அசீரியா இஸ்ரவேலை கி.மு. 722-721ல் அழித்தது.*

***நெகேவ்*** *யூதேயாவின் தென்பகுதியின் பாலைவனம்.*

***நேபோ*** *மோவாப் நாட்டு நகரம். பொய் தெய்வத்தின் பெயர்.*

***நோத்*** *இந்த பெயரின் அர்த்தம் "அலைகின்ற" எனப் பொருள்படும்.*

***நோப் மற்றும் தம்பானேஸ்*** *எகிப்தின் இரு நகரங்கள்.*

***நோவா*** *இளைப்பாறுதல்.*

***பரிசுத்த அப்பம்*** *இது பரிசுத்தக் கூடாரத்தில் வைக்கப்பட்ட சிறப்புக்குரிய அப்பமாகும். இது "சமூகத்தின் அப்பம்" என்றும் அழைக்கப்படுகிறது. லேவி. 24:5-9.*

***பரிசுத்த ஆலயம்*** *சீலோவிலிருந்த பரிசுத்தக் கூடாரம். இங்கே ஜனங்கள் கர்த்தரை தொழுதுகொள்ள போவார்கள் அல்லது அவர்கள் பரிசுத்தக் கூடாரத்தை அமைத்திருந்த விசாலமான இடம்.*

***பரிசுத்த இடம்*** *ஜனங்கள் தேவனைச் சந்திக்கச் சென்ற ஒவ்வொரு இடத்தையும் இது குறிக்கும்.*

***பரிசுத்த கூடாரம்*** *அல்லது ஆசரிப்புக் கூடாரம். தேவன் ஜனங்களின் மத்தியில் வந்து வாழ்வதற்காக அமைக்கப்பட்ட இடம்.*

***பரிசுத்த மலை*** *சீயோன், எருசலேம் கட்டப்பட்டிருக்கிற மலை.*

***பல்லக்கு*** *செல்வந்தர்கள் பயணம் செய்யும் இரதம்.*

***பலிகள்*** *தேவனுக்கான காணிக்கைகள். சில நேரங்களில் இவை சிறப்பான வகை மிருகங்களாக இருக்கும். இவை கொல்லப்பட்டு பலிபீடத்தில் எரிக்கபடும்.*

***பலிபீடம்*** *பலிகளை காணிக்கையாக செலுத்துவதற்காக உபயோகப்படுத்தப்படும் ஒரு மேஜையையோ அல்லது உயர்த்தப்பட்ட இடத்தையோ குறிக்கும்.*

**பஸ்கா** *எகிப்திலிருந்து தேவன் விடுவித்தார் என்பதை நினைவுகூறும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்பட்டது.*

**பஸ்கா பண்டிகை** *இது யூதர்களுக்கு ஒரு முக்கியமான விடுமுறையாகும். அவர்கள் இந்நாளில் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பான உணவை உண்பார்கள். மோசேயின் காலத்தில் அவர்களைத் தேவன் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்ததை நினைவுபடுத்தும் பண்டிகையாகும். எபிரெய வார்த்தையில் ''தவிர்ப்பது, கடந்து செல்வது" அல்லது ''பாதுகாப்பது" எனப் பொருள்படும்.*

**பாகால்** *கானானியர்கள் பாகால் தெய்வம் மழையையும் புயலையும் கொண்டுவருமென்று நம்புகின்றனர். அவர்கள் நிலம் விளைவதும் செழிப்பதும் இதனால்தான் என்று எண்ணுகின்றனர்.*

**பாகால் பெராசீம்** *இந்தப் பெயருக்கு 'கர்த்தர் இதன் மூலம் உடைத்தவர்' எனப் பொருள்படும்.*

**பாகால் பேரீத்** *இந்த தெய்வத்தின் பெயரின் அர்த்தம் "ஒப்பந்தத்தின் ஆண்டவர்" ஆகும்.*

**பாசான்** *இஸ்ரவேலின் வட கிழக்கு பகுதி.*

**பாத் காலீம்** *எருசலேமின் தென் பகுதியிலுள்ள நகரம். 'அலைகளின் மகள்' என்றும் 'கடற்பறவை' என்றும் பொருள். அப்பறவைகள் அதிக சத்தத்தை எழுப்பும்.*

**பாறை** *இது தேவனுக்குரிய ஒரு நாமம். அவர் ஒரு கோட்டையைப் போன்றவர். அல்லது பாதுகாப்புக்குரிய பலமான இடம் என்று இது காட்டுகிறது.*

**பாப்பிரஸ்** *தாளை உண்டாக்கப் பயன்படுத்தப்படும் ஒருவகை தாவரம். அதன் பட்டை படகுகள், மரக்கலங்கள் ஆகியவற்றின் மேற்பகுதியைச் செய்யப் பயன்படுத்தப்பட்டது.*

**பாப்லர்கிரீக்** *மோவாப் நாட்டின் சிற்றோடை.*

**பாபேல்** *அல்லது "பாபிலோன்." இதற்கு "குழப்பம்" என்று அர்த்தம்.*

**பார்லி** *ஒருவகை தானியம்.*

**பாரேஸ்** *"உடைக்கப்பட" எனப் பொருள்படும்.*

**பீர் லகாய் ரோயீ** *"உயிருடனிருந்து என்னை பார்த்துக் கொண்டிருக்கிறவரின் கிணறு" என்பது அர்த்தம்.*

**புடம்** *சோப்பு போன்ற இரசாயனப் பொருள்.*

**புதுப்பாட்டு** *தேவன் தன் ஜனங்களுக்காக புதியவற்றையும் அதிசயங்களையும் செய்யும் பொழுதெல்லாம் ஜனங்கள் அதைப்பற்றி புதிய பாடல்களை எழுதுவார்கள்.*

**பெக்கா** *வட இஸ்ரவேலின் அரசன். கி.மு.* 740-731*ல் ஆண்டவன்.*

**பெத்தாவே** *'பாவத்தின் வீடு.'*

**பெத்தேல்** *"தேவனுடைய வீடு" எனப் பொருள்படும்.*

**பென்னம்மி** *எபிரெய மொழியில், இப்பெயரின் அர்த்தம் "என் தகப்பனின் புத்திரன்" அல்லது "என் மக்களின் புத்திரன்" என்பது போலிருக்கிறது.*

**பென்யமீன்** *"எனது வலது கை (அன்பான) மகன்" எனப் பொருள்படும்.*

**பெயர்செபா** *"உறுதி மொழியின் கிணறு" என்று பொருள்படும்.*

**பெராக்கா** *இச்சொல்லிற்கு "ஆசீர்வாதம்" அல்லது "துதி" எனப் பொருள்படும்.*

**பெல்ஷாத்சாரின் ஆட்சியின் முதல் ஆண்டு** *கி.மு.* 553.

**பெலிஸ்தியர்கள்** *பெலிஸ்திய நாட்டின் கடற்கரையோரமாக வாழும் ஜனங்கள். இஸ்ரவேலரின் பகைவர்களுள் ஒருவர்.*

**பென் இன்னோம் பள்ளத்தாக்கு** *இந்த பென் இன்னோம் பள்ளத்தாக்கு எருசலேமின் தென் மேற்கில் இருந்தது. இந்தப் பள்ளத்தாக்கில் பல குழந்தைகளும் சிறுபிள்ளைகளும் பொய்த் தெய்வங்களுக்குப் பலியிடப்பட்டனர்.*

**பெனாதாத்** *ஆசகேலின் மகன்.*

**பெனியேல்** *"தேவனுடைய முகம்" எனப் பொருள்படும்.*

**பெனோனி** *"என் துக்கத்தின் மகன்" எனப் பொருள்படும்.*

**பேசுகிறவன்** *அல்லது ''தீர்க்கதரிசி" எனப் பொருள்படும்.*

**பேரரசன்** *அல்லது ''தேவன்" எனப் பொருள்படும்.*

**பேராத்** எருசலேம் அருகிலுள்ள கிராமம் என்று கருதப்படுகிறது. யோசுவா 18:23ல் பென்யமீன் கோத்திரம் பெற்ற ஊர்களில் ஒன்று. பேரேதாத் என்பதற்கு ஐப்பிநராத் நதி என்றும் அர்த்த மாகும்.

**பேரேஸ்ஊசா** இந்தப் பெயருக்கு 'ஊசாவின் தண்டனை' எனப் பொருள்படும்.

**பேல், நேபோ** பொய் தெய்வங்கள்.

**பேலேகு** இந்த பெயரின் அர்த்தம் "பிரிவு" என்ப தாகும்.

**போகீம்** இந்த பெயரின் அர்த்தம் "அழுகின்ற ஜனங்கள்" என்பதாகும்.

**போவாஸ்** எபிரெய மொழியில் போவாஸ் என்ப தற்கு "அவரில் பலமிருக்கிறது" எனப் பொருள் படும்.

**போக்காடு** அல்லது மற்றவர்களுடைய குற்றங் களை தன் மேல் சுமக்கின்ற ஆட்டுக்குட்டி. இந்த வார்த்தை அல்லது இந்த பெயரின் அர்த்தம் தெரியவில்லை. இதன் முக்கிய கருத்தானது, அந்த ஆடு ஜனங்களின் பாவங்கள் அனைத்தை யும் எடுத்துக்கொண்டு போய்விட்டது.

**போஸ்றா** ஏதோமில் உள்ள நகரம்.

**மக்னாயீம்** "இரண்டு முகாம்" எனப் பொருள் படும்.

**மகாபரிசுத்த இடம்** பரிசுத்த கூடாரம் அல்லது ஆலயத்தில் உள்ள மிக முக்கியமான அறை. அதில் உடன்படிக்கைப் பெட்டி வைக்கப் பட்டிருக்கும். இது தேவன் இஸ்ரவேலின் அரச ராக வீற்றிருக்கும் சிங்காசனத்தை போன்றது.

**மந்திரவாதி(கள்)** இறந்தவர்களின் ஆவிகளோடு பேச முயற்சிப்பவன்.

**மண்டபம்** ஆலயத்தின் முன்னர் உள்ள திறந்த வெலி.

**மல்காம்** அம்மோனியர்களின் தெய்வம்.

**மார்ப்பதக்கம்** அல்லது நியாயத்தீர்ப்பு பை. பிர தான ஆசாரியனின் மார்பில் அணியப்பட்ட ஒரு துணிபட்டையாகும். யாத். 28:15-30 பார்க்க.

**மரணம்** எழுத்தின் பிராகாரமாக, "இருளின் நாள்" எனப் பொருள்படும். "அபெத்தோன் அல் லது அழிவு" (பார்க்க: வெளிப்படுத்தின விசேஷம் 9:11).

**மரணத்தின் இடம்** "குழி" ஜனங்கள் மரிக்கும் போது போகும் இடம்.

**மன்னா** எபிரெய வார்த்தைகளில் "அது என்ன?" என்பதின் அர்த்தத்தைப் போன்றதா கும்.

**மனாசே** எபிரெய மொழியில் "மறக்க" எனப் பொருள்படும்.

**மனித இனம்** "பெண்ணின் வயிற்றில் பிறப் பவர்கள்."

**மனுக்குலம்** எபிரெய மொழியின் அர்த்தம் "மனிதன்," அல்லது "மக்கள்" அல்லது "ஆதாம்" என்கின்ற பெயர் ஆகும். "சிவப்பு மண்" அல்லது "பூமி" என்று சொல்லுவது போல தொடர்புடை யது ஆகும்.

**மனைவியர்** எழுத்தின் பிராகாரமாக, "மறு மனையட்டி" மனைவியரைப்போல இருக்கின்ற வேலைக்காரப் பொண்கள்.

**மாசா** இந்த வார்த்தைக்கு ''சோதனை'' ''சோதித் தல் அல்லது பரீட்சை" என்று அர்த்தமாகும்.

**மாராள்** இந்த பெயரின் அர்த்தம் "கசப்பு" அல்லது "துக்கம்" ஆகும்.

**மில்லோ** மில்லோ என்பது எருசலேமின் தென் கிழக்கில் உள்ள ஆலயப் பகுதியில் எழுப்பட்ட மேடையைக் குறித்தது.

**மியூனிய ஜனங்கள்** சில பழங்காலத்து கிரேக்க மொழிபெயர்ப்புகளில் "மியூனியர்" என்றிருக் கிறது. எபிரெய மொழியில் "அம்மேனியர்" என் றிருக்கிறது.

**மிஸ்பா** "கண்காணிக்கப்படுகிற இடம்" எனப் பொருள் படும்.

**மிஸ்பா** இஸ்ரவேலிலுள்ள ஒரு மலை.

**மிஸ்ராயீம்** "எகிப்து" நாட்டின் மற்றொரு பெயர்.

**மீதியானியர்** இது பழைமையான கிரேக்க மொழி பெயர்ப்பு ஆகும். எபிரெய மொழியில் "மோவா னிய ஜனங்கள்" என்று மொழிபெயர்க்கப் பட்டி ருக்கிறது.

**முகக் கண்ணாடி** (தர்ப்பணம்) பளபளப்பான வெண்கல தட்டுகளை முகம்பார்க்கும்படி பயன் படுத்தி வந்தனர். யாக். 1:23 பார்க்க.

**மெசொபொத்தாமிய** டைகிரிஸ் மற்றும் ஐபி ராத்து ஆறுகளுக்கு இடையிலுள்ள சிரியாலின் வட பகுதியாகும்.

**மெம்பிஸ்** எகிப்தின் முக்கிய நகரம்.

**மெரோஷா** மீகாவின் பிறந்த ஊர்.

**மெல்லிய தோல்** கடல் நாய் அல்லது கடற்பசு போன்ற சிறப்பான வகை விலங்கிலிருந்து தயாரிக்கப்பட்ட தோல் ஆகும்.

**மெல்லிய துகில்** சணல் நாரிலிருந்து பிரிக்கப்பட்ட மெல்லிய இழைகள் பின்னல் வேலைக்குத் தகுந்தது.

**மேரிபா** இந்த பெயர் "விவாதம்" அல்லது "முரட்டுத்தனம்" எனப் பொருள்படும்.

**மேடைகள்** தொழுதுகொள்ளுவதற்குரிய இடங்கள்.

**மேதெபா** மோவாப் நாட்டு நகரம். 'துக்ககரமானது' என்று பொருள்.

**மோசே** அல்லது "மனாசே."

**மோவாப்** எபிரெய மொழியில், இப்பெயரின் அர்த்தம் "தகப்பனிடத்திலிருந்து" என்பது போலிருக்கிறது.

**மோளேகு** பொய்த் தெய்வம்.

**யாக்கோபு** எபிரெய மொழியில் இப்பெயரின் பொருள் "குதிங்கால்" எனப்படும் அது "பின் தொடருகிறவன்" அல்லது "தந்திரசாலி" எனவும் பொருள்படும். பார்க்க. ஆதியாகமம் 32:22-28.

**யாகீன்** எபிரெய மொழியில் "அவர் நிலை நாட்டுகிறார்" எனப் பொருள்படும்.

**யாசேரின் புத்தகம்** இது இஸ்ரவேலின் போர்கள் பற்றிய பழங்காலத்து புத்தகம்.

**யூதா** "அவர் துதிக்கப்பட்டார்" எனப் பொருள்படும்.

**யூதாவின் திராட்சை** யூதா நாட்டு ஜனங்கள் திராட்சைக் கொடிகளுக்கு ஒப்பிடப்படுகிறார்கள்.

**யூபிலி** பேரிகை முழங்கும் நேரத்தைக் குறிக்கும் எபிரெய வார்த்தையாகும்.

**யெதிதியா** இந்த பெயர் "கர்த்தரால் நேசிக்கப்பட்டவன்" என்பதாகும்.

**யெருபாகால்** இது "பாகால் வாக்குவாதம் செய்ய படும்" எனப் பொருள்படும். எபிரெய வார்த்தைகளைப் போன்றது. இதே வினைச்சொல் "ஒருவர் பக்கம் எடுத்துக்கொண்டு, ஆதரி" என்றும் 31ம் வசனத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

**யெஸ்ரயேல்** தேவன் விதைகளை விதைப்பார்.

**யெஷூரன்** இது இஸ்ரவேலின் மற்றொரு பெயர் ஆகும். இந்தப் பெயர் "நல்லது" அல்லது "நேர்மையானது" எனப் பொருள்படும்.

**யேகோவா** தேவனைக் குறிக்கும் எபிரெய சொல். வழக்கமாக கர்த்தர் என்று மொழி பெயர்க்கப் படுகிறது.

**யோசபாத்தின் பள்ளத்தாக்கு** இந்தப் பெயருக்கு "கர்த்தர் தீர்ப்பளித்தார்" என்று அர்த்தம்.

**யோசேப்பு** "இணைக்க" "சேர்க்க" அல்லது "கூட்ட" எனப் பொருள்படும்.

**யோதாம்** யூதாவின் அரசன் கி.மு. 740-735ல் ஆண்டான்.

**யோவாகாஸ்** இது அகாசியா என்றும் உச்சரிக்கபட்டது.

**ரப்பா** அம்மோனியர்களின் தலைநகரம்.

**ராமாத்லேகி** இந்தப் பெயரின் அர்த்தம் "தாடையெலும்பு உயரம்" என்பதாகும்.

**ரூபன்** "இதோ, (பார்) ஒரு மகன்" எனப் பொருள்படும்.

**ரெகுவேலிடம்** அவன் எத்திரோ என்றும் அழைக்கப்பட்டான்.

**ரெப்பாயீம்** எருசலேமின் தென் மேற்கிலுள்ளது.

**ரேத்சீன்** ஆராமின் அரசன். கி.மு. 740-731ல் ஆண்டவன்.

**லிவியாதான்** இது என்ன விலங்கு என்று நமக்கு உறுதியாக தெரியாது. இது ஒரு முதலையாகவே அல்லது ஒரு ராட்சச கடல் விலங்காகவோ இருக்கலாம்.

**லீபனோன்** இஸ்ரவேலின் வடபகுதி. இது கேதுரு மரங்களுக்கும் பைன் மரங்களுக்கும் பேர் பெற்றது.

***லேவியர்*** *லேவியர் கோத்திரத்தை சேர்ந்த ஜனங்கள். லேவியர்கள் ஆலயத்தில் ஆசாரியர்களுக்கு உதவி செய்தும் உள்நாட்டு அரசு பணியும் செய்தனர்.*

***லோருகாமா*** *அவள் கருணைப் பெறாதவள்.*

***லோகம்மி*** *என் மக்கள் அல்ல.*

***வானராக்கினி*** *பொய்த் தெய்வங்கள் அஸ்தரே இவள் போர் மற்றும் காமத் தெய்வம். மெசெப்பெட்டோமிய ஜனங்கள் தொழுது வந்தனர். வீனஸ் கிரகம் போல் வானத்தில் தோன்றுவது என ஜனங்கள் நினைத்தனர்.*

***வணிகர்*** *வியாபாரிகளின் குழுக்கள். வழக்கமாக பல வியாபாரிகள் ஒன்றாக சேர்ந்து கழுதை அல்லது ஒட்டகங்களின் மேல் தங்கள் பொருட்களை ஏற்றுக் கொண்டு பயணம் செய்தார்கள்.*

***வல்லூறு*** *பருந்தைப்போன்ற ஒரு வகைப் பறவை.*

***வாசனைப் பொருள்*** *விலையுயர்ந்த “பிதோல்” என்னப்பட்ட நறுமணமுள்ள வாசனை திரவியம்.*

***வாழ்வளிக்கும் மரம்*** *இம்மரத்தின் பழம் வாழ்வதற்கான வல்லமையை ஜனங்களுக்குத் தருகின்றது. பார்க்க ஆதி. 3:22 மற்றும் வெளி. 22:1-2.*

***விருத்தசேதனம்*** *ஆணின் சிறுநீரகத்தின் நுனித் தோலைத் துண்டித்தல். இது தேவன் இஸ்ரவேல் ஜனங்களோடு செய்த உடன்படிக்கையில் பங்கு கொள்வதைக் காட்ட, எல்லா யூத மகனுக்கும் செய்யப்பட்டது. ஆதி.* 17:9-14.

***விஷேச ஆடைகள்*** *இந்தச் சிறப்பான ஆடைகளை ஜனங்கள் தேவனை தொழுதுகொள்ள ஆலயத் திற்குச் செல்லும்போது அணிந்து கொண்டனர்.*

***வெண்கலம்*** *எபிரெய அர்த்தத்தில் இது பித்தளையாகவும் இருக்கலாம்.*

***வீணை*** *பல நரம்புகளாலாகிய இசைக்கருவி.*

***வெள்ளிக்காசு*** *“கேஷிதா” தந்தையர்களின் காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயம். பார்க்க: ஆதி.* 33:19, *யோசுவா* 24:32.

***வேத பாரகர்கள்*** *எழுத்துக்களை நகல் எடுப்பவர்கள்.*

**1**/2 ***சேக்கல்*** 5.7 *கிராம் எடை அளவு.*

**1** ***சேக்கல்*** *ஒரு அவுன்ஸ் என்ற அளவின் ஐந்தில் இரண்டு பாகம் ஒரு சேக்கலாகும்.*

**1** ***பெக்கா*** *அல்லது* 0.5 *சேக்கல் எடை.* (5.75 *கிராம்*).

**1 1/2** ***முழம்*** 73 *மில்லி மீட்டர்.*

**2** ***டன்கள்*** *அல்லது* 29 *கிகாரும்* 730 *சேக்கலும் கொண்ட எடை.* (994.27 *கிலோ.*)

**3** ***முழம்*** 1.575 *மீட்டர் நீளம்.*

**3** 3/4 ***டன்கள்*** *அல்லது* 100 *கிகாரும்* 1,775 *சேக்கலும் நிறை கொண்டது.* (1864.26 *கிலோ*).

**4** ***முழம்*** 2 *மீட்டர்.*

**4** ***ஆழாக்கு*** *சுமார்* 91.2 *கிராம் எடையளவுள்ள வெள்ளி, என கொள்ளலாம்.*

**5** ***முழம்*** 2.625 *மீட்டர்.*

**5** ***பவுண்டு*** *சுமார்* 2.27 *கிலோகிராம் எடை.*

**6** ***பவுண்டு*** 2.72 *கிலோ எடையளவு.*

**8** ***கிண்ணங்கள்*** *எழுத்தின் பிரகாரமாக ஒரு எப்பா அளவில் பத்தில் ஒரு பங்காகும்.*

**9** ***அங்குலம்*** *1 ஜாண் அளவு பெருவிரல் நுனியிலிருந்து சிறுவிரல் நுனிவரை உள்ள நீள அளவு.*

**9** ***அடி உயரம்*** 6 *முழம்* 1 *ஜாணளவாகும். எனினும் ஜோசப்பஸின் கிரேக்க ஏட்டின் படியும் கும்ரானின் ஒரு எபிரெய மொழி பெயர்ப்பின்படியும் அவன் 4முழம் 1ஜாண் உயரமாக இருந்தான், அதாவது 6 அடி 9அங்குல உயரம்.*

**10** ***முழம்*** 5 *மீட்டர்.*

12 ***பவுண்டு*** 5.44 *கிலோ எடையளவு.*

**15** ***முழம்*** 25’ 10’’ (7.87 *மீ.*)

**16** ***கிண்ணங்கள்*** *எழுத்தின் பிரகாரமாக, ஒரு எப்பா அளவில் பத்தில் இரண்டு பங்காகும் எனப் பொருள்படும்.*

**20** ***முழம்*** 34’ 5.375 (10.5 *மீ.*)

**28** ***முழம்*** 14 *மீட்டர்.*

**26 1/2 டன்** *அல்லது* 70 *கிகாரும்* 2400 *சேக்கலும். (*13,174.077 *கிலோ.)*

30 **வெள்ளிப் பணம்** *ஒரு புதிய அடிமைக்கான விலை.*

**50 முழம்** 26.25 *மீட்டர்.*

**50 பவுண்டு** ˙*அல்லது* 1,775 *சேக்கல். (*22.667 *கிலோ).*

**75 பவுண்டு** *(அல்லது* 1 *கிகார்) சுமார்* 34 *கிலோகிராம் எடையளவுக்கு சமம்.*

**100 முழம்** *சுமார்* 52.5 *மீட்டர்.*

Copyright © 2005 by World Bible Translation Center






Copyright © 2005 by World Bible Translation Center




Copyright © 2005 by World Bible Translation Center




Copyright © 2003 by World Bible Translation Center

Copyright © 2005 by World Bible Translation Center



Copyright © 2005 by World Bible Translation Center

